


**20. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி பீகார் மாநிலம் சிவானில் ஐந்தாயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 28 புதிய வளர்ச்சி திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

2. நாடுமுழுவதும் எய்ம்ஸ் உள்ளிட்ட மருத்துவ கட்டமைப்புகள் அதிகரித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. திருச்சி வேலூர் கள்ளக்குறிச்சி திருவண்ணாமலை மாவட்டங்களில் 4 புதிய கலை அறிவியல் கல்லூரிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்துள்ளார்.

4. கர்நாடக அணைகளிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்படுவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

5. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்ஸில் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

************

**பிரதமர் - பீகார்**

இந்தியா விரைவில் 3ஆவது பொருளாதார நாடாக உயர்வதை உலக நாடுகள் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் சிவானில் 5 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 28 புதிய வளர்ச்சி திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதுடன் புதிய திட்டங்களை துவக்கிவைத்து பிரதமர் பேசினார்.

இந்தியாவின் துரித வளர்ச்சியை உலக நாடுகள் வியந்து கண்ணோக்குவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

தேசிய ஜன நாயக கூட்டணி வாழ்க்கைக்கான இயக்கத்தை உறுதியுடன் முன்னெடுத்துச்செல்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமரின் வீட்டு வசதி திட்டம், ரயில்வே, மின்திட்டங்களுடன் நகர்புற மேம்பாடு, கழிவுநீர் சுத்திகரிப்பு சார்ந்த திட்டங்கள் இந்நிகழ்ச்சியில் தொடங்கிவைக்கப்பட்டன.

பிரதமர் ஒடிசா மாநிலத்தில் இன்றுமாலை 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

************

**பிரதமர் யோகா**

11ஆவது சர்வதேச யோகா தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சியில் நாளை காலை பங்கேற்கிறார்.

“ஒரே பூமி ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா” என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்தாண்டு யோகா நிகழ்வில் 5 லட்சம் பேர் பங்கேற்கின்றனர்.

நாடுமுழுவதும் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமான இடங்களில் ஒரே நேரத்தில் யோகா நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டிலும் யோகா தினத்தை ஒட்டி பல்வேறு** நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

**திருவண்ணாமலை மாவட்ட பிஜேபி அலுவலகத்தில்** 60க்கும் மேற்பட்டோர் யோக பயிற்சிகளை மேற்கொண்டனர்.

**தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி** மாணாக்கருக்கு யோகா கலையில் இன்று பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**விருதுநகர் மாவட்டத்தில் அரசு பள்ளியில் யோகா** பயிற்சி மேற்கொண்ட மாணாக்கர் நினைவாற்றல் மேம்படுவதாக தெரிவித்தனர்.

**வாய்ஸ்**

**தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்தில்** ஆயிரம் மாணாக்கர் பங்குபெறும் யோகா நிகழ்வு நாளை நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**யோக பயிற்சிகளை செய்வதன் மூலம் வாழ்நாள்** முழுவதும் பல்வேறு நோய்களிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்ள முடியும் என்று திருச்சி ஸ்ரீரங்கம் விவேகானந்தா யோகா மையத்தின் பயிற்றுனர் திருமதி சுஜாதா சண்முகம் கூறுகிறார்:

**வாய்ஸ்**

************

**குடியரசுத்தலைவர்**

வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் மாற்றுத்திறனாளிகளின் பங்களிப்பை ஊக்குவிப்பது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

உத்திரகாண்ட் மாநிலம் டேராடூனில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஆளுமை அளிக்கும் தேசிய கல்வி நிறுவனத்தில் இன்று உரையாற்றிய அவர் வளர்ந்து வரும் தொழில்நுட்ப உதவிகளோடு வாழ்க்கை நீரோட்டத்தில் மாற்றுத்திறனாளிகளும் அர்ப்பணிப்புடன் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தேசிய கல்வி கொள்கை பிற குழந்தைகளை போல மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளும் சமமான கல்வி பெறுவதை உறுதி செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்து அவர்கள் சமூகத்தில் சமமான பங்களிப்புடன் செயலாற்ற அனைவருக்குமான இந்தியா இயக்கம் வழிகோலுவதாக குறிப்பிட்டார்.

132 ஏக்கரில் உருவாக உள்ள குடியரசு தலைவர் மாளிகை பூங்காவிற்கு குடியரசு தலைவர் அடிக்கல் நாட்டினார்.

************

**அமித்ஷா**

நாடுமுழுவதும் எய்ம்ஸ் மருத்துமனைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் 2014ஆம் ஆண்டு 23 எயிம்ஸ் மருத்துவமனைகள் மட்டுமே இருந்ததாக சுட்டிக்காட்டினார்.

நாடுமுழுவதும் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கையும், 780 ஆக அதிகரித்துள்ளதாகவும், முன்னதாக இது 387-ஆக இருந்ததாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

MBBS மருத்துவ இடங்களும் ஒரு லட்சத்து 18 ஆயிரமாக உயர்ந்துள்ளது என்று திரு.அமித்ஷா சுட்டிக்காட்டினார்.

************

**அஷ்விணி வைஷ்ணவ**

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகரில் சர்வதேச பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டின் ஒருபகுதியாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் சவுதி அரேபியாவின் தளவாட போக்குவரத்து அமைச்சர் சலேக் அல்ஜாசருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இந்தியா சவுதி அரேபியா இடையே கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களின் ஒத்துழைப்பு தளவாட பூங்காக்கள் போன்றவை குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

ரஷ்ய ரயில்வே நிர்வாக இயக்குனர் ஒலெஜ் பெலோசராவுடனும் திரு.வைஷ்ணவ் ரயில்வே துறையில் தொழில்நுட்ப திறன் மேம்பாடு அதிவேக ரயில்கள் இயக்கம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

************

**பியூஷ் கோயல்**

உலகளாவிய படைப்பாற்றல் திறனின் மையமாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர் அடுத்த 10, 15 ஆண்டுகளில் படைப்பாற்றல் திறன் சூழலில் இந்தியா பெருமளவு முதலீடுகளை மேற்கொள்ளும் என்றார்.

நவீன தொழில்நுட்பத்தில் இந்தியா முதன்மையான நாடாக உருவெடுக்கும் வகையில் மானியங்கள் நிதி உதவிகள் போன்றவற்றை மத்திய அரசு வழங்கும் என்றார்.

இந்தியாவின் மின்னணு கட்டமைப்பு, படைப்பாற்றல் திறன் முன்னேற்றத்தை எடுத்துரைத்த அவர் இவற்றை உலக நாடுகள் பயன்படுத்திக்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தியா, பிரிட்டன் நாடுகளுக்கிடையே வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பம், படைப்பாற்றல் பிரிவின் வலிமையையும் திரு.பியூஷ்கோயல் எடுத்துரைத்தார்.

************

**H.D குமாரசாமி**

சேலம் எ.்.கு உருக்காலையில் மத்திய கன ரக தொழில்துறை அமைச்சர் திரு.H.D குமாரசாமி இன்று பிற்பகல் ஆய்வு மேற்கொள்கிறார்.

இத்தொழிற்சாலையின் திட்டபணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளும் அவர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடுகிறார்.

உருக்காலை வளாகத்தில் நாளை நடைபெறும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் பங்கேற்கிறார்.

************

**ஹர்தீப்சிங் பூரி**

கச்சா எண்ணெய் விலை கட்டுக்குள் உள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில் ஈரான் - இஸ்ரேல் இடையே போர் பதற்றம் காரணமாக கச்சா எண்ணெய் விலை அதிகரிக்க கூடும் என்ற சூழலில் மேற்கத்திய நாடுகளிலிருந்து அதிக அளவில் எண்ணெய் சந்தைக்கு வருவதால் பற்றாக்குறைக்கு வாய்ப்பில்லை என்றார்.

************

**ஏர் இண்டியா**

பராமரிப்பு காரணங்களுக்காக ஏர் இண்டியாவின் ஒருசில போயிங் ரக சர்வதேச விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன..

இதன்படி அம்ரித்சர் மற்றும் கோவாவிலிருந்து – லண்டனுக்கான போக்குவரத்து சேவை அடுத்த மாதம் 15ஆம் தேதிவரையிலும்,

டெல்லி – நைரோபி இடையிலான சேவை வரும் 30ஆம் தேதிவரையிலும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் டெல்லியிலிருந்து டொரண்டோ, வாஷிங்டன், லண்டன், பாரீஸ், வியன்னா, மெல்பர்ன், டோக்கியோ நாடுகளுக்கான விமான சேவைகளும் நாளைமுதல் வரும் 15ஆம் தேதிவரை குறைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

************

**இறக்குமதி கட்டுப்பாடுகள்**

ஒரு சதவிகிதத்திற்கும் அதிகமான தங்கத்தை கொண்டுள்ள பெலாடியம், ரோடியம், இரிடியம் ஆகிய கலப்பு உலோகங்களின் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்து அந்நிய வர்த்தக இயக்குனரகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த கட்டுப்பாடுகள் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளன.

இருப்பினும் தூள் வடிவிலோ, இதர பிற வடிவுகளிலோ இவை இருக்கும் பட்சத்தில் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.

மேலும் விலை உயர்ந்த கலப்பு உலோக கூழ்மங்கள் மற்றும் இவற்றின் ஒருங்கிணைந்த உற்பத்தி பொருட்களின் இறக்குமதிக்கும் இயக்குனரகம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

************

**Nahfh**

Nahf fiy kdijAk; cliyAk; Nkk;gLj;JtNjhL tho;it tsg;gLj;JfpwJ.

mj;jifa Nahf fiyia ehk; jpdrhp gof;fkhf nfhs;Sk;NghJ mJ ,ay;ghdjhf khwptpLfpwJ.

mjd; gyd;fs; midtUf;Fk; fpl;l njhlq;FfpwJ vd;W gpujkh; jpU.eNue;jpuNkhb njhptpj;jjw;F Vw;g

rh;tNjr Nahfh jpdj;jpy; ehk; midtUk; gq;nfLg;Nghk;  Nahf gapw;rpia Nkw;nfhs;Nthk;

ehis ……. rh;tNjr Nahfh jpdk;

************

**முதலமைச்சர்**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உயர்கல்வித்துறை சார்பில் திருச்சி மாவட்டம் துறையூர், வேலூர் கே.வி.குப்பம், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை, திருவண்ணாமலை செங்கம் ஆகிய நான்கு இடங்களில் புதிய கலை அறிவியல் கல்லூரிகளை சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் தொடங்கிவைத்தார்.

திருவள்ளுவர் பல்கலைகழகத்தில் 36 கோடியே 18 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கல்வி சார் கட்டிடம், துணைவேந்தர், உதவி பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்களுக்கான குடியிருப்புகளையும் முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

************

**மூர்த்தி**

தமிழ்நாடு வணிகவரி பதிவுத்துறையின் பணிதிறன் குறித்த ஆய்வுக்கூட்டம் இத்துறைக்கான அமைச்சர் திரு.மூர்த்தி தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பதிவுத்துறை தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

முன்னதாக பதிவுத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 10 புதிய வாகனங்களை அமைச்சர் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

************

**அகதிகள் தினம்**

உலக அகதிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பல்வேறு சூழல்களால் சொந்த நாட்டை விட்டு வெளியிடங்களில் வசிப்போரை கவுரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

“அகதிகள் மீதான ஒற்றுமை” என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் அகதிகளின் மறுவாழ்வை உறுதி செய்யும் வகையில் அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாத்து மாண்பினை போற்றுவோம் என்று தெரிவித்துள்ளார்.

************

**இருவரி**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

இதுவரை 22 ஆயிரத்து 855 மாணாக்கர் விண்ணப்பித்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் அரசினர் தொழில்பயிற்சி நிலையத்தில் நடப்பாண்டிற்கான நேரடி மாணாக்கர் சேர்க்கை வாய்ப்பை தகுதியுடையோர் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மூத்த குடிமக்கள் அவர்களுக்கான கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்து அரசின் நல திட்ட உதவிகளை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 31ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நாளை தொடங்குகிறது.

திருச்சி பொன்மலை பணிமனையில் 4 கோடி ரூபாய் மதிப்பிலான உதகை ரயில் எஞ்சின் பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததை அடுத்து புதுப்பொலிவுடன் இது உதகை மலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதன்மூலம் குன்னூர் ரயில் நிலையத்திலிருந்து உதகைக்கு இயக்கப்படும் மலைரயில் எஞ்சின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது.

************

**மேட்டூர் - ஒகேனக்கல்**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக கர்நாடக மாநிலம் கபினி கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து கூடுதல் தண்ணீர் திறந்துவிடப்படுவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றிற்கு நீர்வரத்து இன்று 16 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரத்து 218 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவும் 16 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

************

**கிரிக்கெட்**

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்ஸில் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் சுப்மன் கில் தலைமையில் இந்திய அணி களமிறங்குகிறது.

************

**ஹாக்கி**

சென்னையில் நடைபெறும் மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி ஆடவர் பிரிவில் இன்று ஆந்திரபிரதேசம் - கேரளாவையும்,

ஒடிசா – பஞ்சாபையும் எதிர்கொள்கின்றன.

************

**டென்னிஸ்**

லண்டனில் நடைபெறும் ஏ.டி.பி டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, பெல்ஜியத்தின் Sander Gille-இணை – இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**